KALAM -International Research Journal
Faculty of Arts and Culture
South Eastern University of Sri Lanka
Volume X Issue 1, 2016

# சமாதானம் – எண்ணக்கருவாக்கமும் புரிந்துகொள்ளலும்

**ஆதம்வாவா சர்ஜூன்**
அரசறிவியல் துறை
பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை-இலங்கை

**ஆய்வுச் சுருக்கம்**

சமாதானம் குறித்த வேறுபட்ட விளக்கங்களும் புரிதல்களும் எம்மத்தியில் நிலவுகின்றன. அவை நாம் வாழ்கின்ற சமூக சூழல், நாம் பின்பற்றுகின்ற மதம், நமது அரசியல் சார்புநிலை மற்றும் தொழில்நிலை அவ்வாறே நமது கலாசாரம் மற்றும் பழக்க வழக்கங்கள் என்வனவற்றின் செல்வாக்குக்கு உட்பட்டவை. ஆதலால் சமாதானம் குறித்த தெளிவான புரிந்து கொள்ளலானது பல்வேறு மட்டங்களில் சமாதான சூழலையும் கட்டமைப்பையும் உருவாக்க பெருமளவுக்கு பங்களிப்பு செய்யும். இந்தக் கட்டுரை சமாதானம் எனும் விடயத்தை எண்ணக்கருவாக்கவும் புரிந்துகொள்ளச் செய்யவும் முயற்சிக்கிறது. முழுவதும் இரண்டாம் நிலைத் தகவல்களை அடிப்படையாகக் கொண்டு விபரண ரீதியில் எழுதப்பட்டுள்ள இக்கட்டுரை பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் ஆய்வாளர்கள் மட்டுமன்றி சாதாரண பொதுமக்களுக்கும் சமாதானத்தையும் அதன் முக்கியத்துவத்தையும் புரிந்து கொள்ளச் செய்ய பெரிதும் உதவும் என்பதில் ஐயமில்லை.

**பிரதான சொற்கள்:** சமாதானம், சமாதானத்தை புரிந்துகொள்ளல், சமாதான கலாசாரம், சமாதான செயன்முறை, நேர்நிலைச் சமாதானம்.

## அறிமுகம்

சமாதானம் எனும் எண்ணக்கரு வேறுபட்ட மக்களுக்கு வேறுபட்ட பொருளை உணர்த்துகிறது. சிலர் சமாதானத்தை குறைந்தளவிலான முரண்பாடு என அடையாளம் காண்பர். எல்லா மக்களும் தங்களுக்குரிய உரிமைகளை அனுபவிப்பதற்கான சூழ்நிலையே சமாதானம் என வேறு சிலர் சமாதானத்தைக் காண்பர். வேறுபட்ட சமூகங்களிலும் கலாசாரங்களிலும் சமாதானம் என்பது முன்னேற்றமான தொடர்பாடல் மற்றும் பொதுவான புரிந்துணர்வு, அவ்வாறே ஒருவரை மற்றவர் புரிந்துகொள்ளல், இணைந்து சகவாழ்வு வாழ்தல் என பலவாறு விளக்கப்பட்டுள்ளது.

சமாதானம் குறித்த எண்ணக் கருவாக்கமும் புரிந்துகொள்தலும் தனிப்பட்டவர்களின் விருப்பு மற்றும் நோக்கு என்பவற்றைப் பொறுத்து வேறுபட்டுக் காணப்படுகிறது.

சமாதானத்தை உருவாக்குதல் என்பது அநேகமாக வன்முறையைப் பாவிக்காத வழிமுறைகள் உடான முரண்பாட்டுத் தீர்வு என்பதுடன் தொடர்புபடுகிறது. சமாதானமான சமூகமொன்றில் இனவாதம் மற்றும் ஏனைய அடக்குமுறைகள் அற்ற ஏற்பாடுகள் மூலம் தனியாட்களின் உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டிருக்கும். அந்தவகையில் ஒரு சமூகத்தில் வெறுமனே வன்முறையோ யுத்தமோ இல்லாமலிருக்கின்ற சூழலோ அல்லது வன்முறைகளையும் யுத்தங்களையும் முகாமை செய்தலோ சமாதானம் எனக்கண்டுகொள்ள முடியாது. அவற்றையும் விட மேலான ஒரு நிலையையை சமாதானம் குறித்து நிற்கிறது.

இந்தக் கட்டுரை சமாதானம் எனும் விடயத்தை எண்ணக்கருவாக்கவும் புரிந்துகொள்ளச் செய்யவும் முயற்சிக்கிறது. இதற்காக சமாதானம் குறித்த வரைவிலக்கங்கள், சமாதானத்தின் அடிப்படை அம்சங்கள், சமாதானத்தின் பரிமானங்கள் மற்றும் முக்கியத்துவங்கள்

அவ்வாறே சமாதானம் நிலவும் சமூகத்தின் பண்புகள் என்பவை இங்கு பரிசீலிக்கப்பட்டிருக்கின்றன.
இக்கட்டுரைக்கான தகவல்களானவை புத்தகங்கள், ஆய்வுச் சஞ்சிகை கட்டுரைகள் என முழுவதும் இரண்டாம்நிலை மூலங்களில் இருந்தே பெறப்பட்டுள்ளன. சமாதானம் குறித்த புரிந்துணர்வும் விழிப்புணர்வும் மிகவும் அவசியமாக எல்லோர் மத்தியிலும் வேண்டப்படுகின்ற இன்றைய காலகட்டத்தில் சமாதானம் குறித்த இவ்வாறானதொரு எண்ணக்கருவாக்கக் கட்டுரை மிகவும் பயனுடையதாகவிருக்கும். மேலும் பாடசாலை மற்றும் பல்கலைக்கழக பாடவிதானங்களில் சமாதானக் கல்வியும் அவசியமான ஒன்றாக புகுத்தப்பட்டுள்ளதால் மாணவர்கள், ஆசிரியர்கள், சமாதான செயற்பாட்டாளர்கள், ஆய்வாளர்கள், ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்கள் என பலதரப்பட்ட வகுப்பினருக்கும் சமாதானம் எனும் எண்ணக்கருவை புரிந்து கொள்ளச்செய்வதற்கு இக்கட்டுரை பயனுடையதாகவிருக்கும்.

## சமாதானம்: வரையறை அல்லது பொருள் விளக்கம்

சமாதானம் எனும் எண்ணக்கவை வரையறை செய்வது என்பது அவ்வளவு இலகுவானவொரு விடயமல்ல. மரபு ரீதியாக சமாதானம் என்பது யுத்தத்துக்கு எதிரான ஒரு விடயமாகவே எண்ணக்கருவாக்கப்பட்டும் புரிந்துகொள்ளப்பட்டும் வந்திருக்கிறது. *Irena* எனும் கிரேக்க மொழிச் சொல்லிலிருந்தும் இலத்தீன் மொழிச்சொல்லான *pax* என்பதிலிருந்தும் சமாதானம் எனும் பொருள்படும் *peace* எனும் ஆங்கிலச் சொல் நடைமுறைக்கு வந்ததாக அறியப்படுகிறது. *Pax* என்ற பதம் இரு போட்டிபோடும் தனிநபர்கள், மக்கள் குழுக்கள், அல்லது தேசங்களுக்கிடையோயான முரண்பாடு, சர்ச்சை அல்லது யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்காக மேற்கொள்ளும் ஓர் உடண்படிக்கை அல்லது ஒப்பந்தம் என அறியப்பட்டிருந்தது. அந்தவகையில் சமாதானம் (peace) என்ற பதமானது நல்லெண்ணம், நட்பு, நல்லிணக்கம், பொருத்தப்பாடு, சாந்தி, அமைதி, நடுநிலைமை, நீதி, ஒத்திசைவு மற்றும் ஒழுங்குமுறை போன்ற அர்த்தங்களிலும் பயன்படுத்தப்படுவதுண்டு. எவ்வாறாயினும் சமாதானம் எனும் பதத்தை தெளிவாக அர்த்தப்படுத்துவது கடினமானதாகும். இதன் பொருள் சமூக சூழலுக்கும் பண்பாட்டு வேறுபாடுகளுக்கும் ஏற்ப வெவ்வேறு அர்த்தங்களில்புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது
.
சமாதானம் பற்றிய விளக்கமானது வழக்கமாக விழுமியங்கள், நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் போன்றவற்றுடன் சம்மந்தப்பட்டிருக்கும். இவ்விதமாக சமாதானம் பற்றிய அர்த்தங்கள் ஒவ்வொரு நிலைக்கும் ஏற்ப வேறுபட்டு நிற்பதனால் அது பற்றி ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொதுவான வரைவிலக்கணத்தை முன்வைப்பது கடிணமானதாகும்.
அனேகமான மேற்கத்தைய சிந்தனையாளர்களினதும் ஆய்வாளர்களினதும் பார்வையில் சமாதானம் என்பது கருத்து வேறுபாடுகளோ வன்முறைகளோ யுத்தமோ இல்லாத நிலையாகும். மரபு ரீதியாகவும் சமாதானம் என்பது யுத்தம் இல்லாத நிலை என்றே நோக்கப்பட்டிருக்கிறது. ஏனெனில் வரலாற்றில் அனேகமான காலத்தில் அனேகமான பகுதிகளில் யுத்தம் நடைபெற்று அதனால் மக்கள் தங்கள் வாழ்வில் பல்வேறு இன்னல்களை அனுபவித்து வந்திருக்கின்றனர். ஆதலால் அவர்கள் சமாதானத்தை அல்லது சமாதான ஒப்பந்தத்தை வேண்டிநின்றிருக்கின்றனர். அவர்கள் வேண்டிய சமாதானம் அல்லது சமாதான ஒப்பந்தம் என்பது குறிப்பாக யுத்தத்தையும் வன்முறையையும் அதனூடான இழப்புக்களையும் தடுப்பது அல்லது இல்லாமல் செய்வது என்பதையே பிரதான நோக்காகக் கொண்டிருந்திருக்கிறது. எனினும் இவ்விளக்கம் சமாதானத்தை விளக்கப் போதுமானதல்ல. சமாதானம் என்பதை யுத்தம், வன்முறை இல்லாத நிலை என நோக்குவது முழுமையான நோக்கு எனக்கூற முடியாது. எனவே சமாதானம் என்பது பரந்ததொரு பொருளில் நோக்கப்பட வேண்டியதாகும்.

யுத்தம், வன்முறை என்பன இருக்கின்ற போதே சமாதானம் என்பது அத்தியவசியமானதும் அவசரமானதுமானதொரு தேவைப்பாடாக கருதப்படுகின்றது. எனினும் இன்னும் பல நீண்டகாலத் தேவைகளும் சமாதானத்துடன்

இணைந்துள்ளதைச் சுட்டிக்காட்டலாம். அவற்றுள் ஒன்று அபிவிருத்தி ஆகும். மற்றயது நீதியும் சூழலுடனான இணக்கமுமாகும். சூழலுடன் தொடர்புடைய சமாதானம் பற்றிய அணுகுமுறையானது சூழல் சார்ந்த அரசியலாக இன்று வளர்ச்சி பெற்றுள்ளது. இவ்வாறு பல்பொருள்சார் அணுகுமுறையினூடாக நோக்கப்படும் சமாதானம் பற்றிய எண்ணக்கருவிற்கு பல்வேறு அறிஞர்களும் பலவிதமான விளக்கங்களை வழங்கியுள்ளனர். அந்தவகையில் சமாதானம் எனும் எண்ணக்கருவை விளக்கும் நோக்கில் முன்வைக்கப்பட்டுள்ள வரைவிலக்கணங்கள் சிலவற்றை பின்வருமாறு நோக்கலாம்.

சமாதானக் கற்கைக்கு முறையாக அடித்தளமிட்டவரான ஜொஹான் கல்துங்க் என்பவர் சமாதானத்தை சாதாரண வடிவில் நேரடி மற்றும் கட்டமைப்பு வடிவிலான வன்முறை இல்லாமை (absence of direct and structural violence) என வறையறை செய்கிறார் (Gultung 1969). பிரபலமாக மனித உரிமைச் செயற்பாட்டாளரான மார்டின் லூதர் கிங் (Martin Luther Kin, Jr.) என்பவர் சமாதானத்தை வரைவிலக்கணப்படுத்தும் போது 'சமாதானம் என்பது வெறுமனே பதற்றமற்ற சூழ்நிலை என்பதல்ல. மாறாக அது நீதியின் இருப்பு' என்கின்றார் (Kin 2008:83). அவ்வாறே, அல்பேர்ட் ஐன்ஸ்டீனின் (Albert Einstein) விளக்கமும் உள்ளது. இவரது கருத்துப்படி 'சமாதானம் என்பது வெறுமனே யுத்தமற்ற நிலை என்பதல்ல. மாறாக நீதி, சட்டம் மற்றும் ஒழுங்கு என்பவற்றின் இருப்பு. சுருக்கமாகச் சொன்னால் அரசாங்கத்தின் இருப்பு' (Vesilind 2005:43) என்பதாக உள்ளது. இவர்கள் இருவரும் நீதியின் இருப்பே உண்மையான சமாதானம் என விளக்க முற்பட்டுள்ளதைக் காணலாம்.

திரேசா மற்றும் ஜீவே ஆகியோர் சமாதானத்தை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துகின்றனர். அதாவது: 'மக்களிடையே அவர்கள் பேசும், கேட்கும், மற்றவருடன் கலந்துறவாடும் முறைகளின் ஊடாக ஒற்றுமையைத் தூண்டுவதும் மற்றவர்களைத் துண்புறுத்தல், கொடுமைப்படுத்தல், மற்றவரை அழித்தல் போன்ற எண்ணங்களை தடுப்பதுமான நடத்தையாகும்' என்பதே அவர்களின் விளக்கமாக உள்ளது (சர்ஜுன் மற்றும் றிபான் 2011). இவர்கள் இருவரும் சமாதானத்தை யுத்தம், வன்முறை இல்லாத நிலையாகக் கருதாது ஒரு பரந்த பொருளில் மனிதர்களுக்கிடையிலான ஒற்றுமையான உறவு, ஒருவருக்கொருவர் தீங்கிழைப்பதைத் தடுத்தல் ஆகிய நடத்தையாக கருதுகின்றனர். புகழ்பெற்ற சமாதானப் ஆர்வலரான தலை லாமா (Dalai Lama, The XIV) என்பவரின் நோக்கில் சமாதானம் என்பது மனித உரிமைகளை மதிப்பது, மக்களின் நல்வாழ்வு, தனிநபர்கள் மற்றும் தேசங்களின் விடுதலை என்பவற்றை குறிக்கிறது (Abrams 1995:16). கேம்பிரிட்ஜ் சொல்லரகராதியானது (Cambridge Advanced Learners Dictionary) சமாதானம் என்பதை 'யுத்தம் மற்றும் வன்முறையிலிருந்து விடுபட்ட நிலையாகும். விசேடமாக மக்கள் உடண்பாடின்மையைத் தவிர்த்து ஒன்றாக வேலை செய்து சந்தோசமாக வாழ்வதாகும்' என விளக்கியுள்ளது.

தனிநபர்களுக்கு அப்பால் பல்வேறு துறைகளும் அவற்றின் துறைசார் நிபுணர்களும் சமாதானம் எனும் எண்ணக்கருவை வெவ்வேறு நோக்குகளில் வரையறை செய்திருப்பதை அவதானிக்கலாம். அரசியல் நோக்கில் சமாதானம் என்பது முறையான மற்றும் முறையற்ற நிறுவனங்கள், செயற்பாடுகள் மற்றும் பழக்கவழக்கங்கள் ஊடாக நீதி மற்றும் சமூக ஸ்திரத்தன்மையே உறுதிப்படுததுகின்ற ஓர் அரசியல் சூழ்நிலையை குறிக்கிறது. மேலும் அரசியல் நோக்கில் சமாதானம் என்பது ஜனநாகத்தின் விளைவு; அது நல்லாட்சியிலிருந்து தோற்றம் பெறுகிறது என்பதாக வரையறுக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதாரத்தைப் பொறுத்தவரை சமாதானம் என்பது வறுமையை ஒழிப்பது. ஆதலால் மக்களின் பொருளாதார நலன் என்பதே சமாதானத்தின் அடிப்படை என பொருளாதாரம் கருதுகிறது. சட்டத்தைப் பொறுத்தவரை சட்டமும் ஒழுக்கமும் நிலைநாட்டப்படுவதே சமாதானம். யுத்தத்துக்கு எதிரானவர்களின் கருத்துப்படி யுத்தததை நிறுத்துவதே சமாதானம். சமூக இணக்கத்தைப் பொறுத்தவரை சமாதானம் என்பது பல்வேறுபட்ட குழுக்களுக்கிடையே முரண்பாடுகளைத் தீர்ப்பதும் அவர்களை

ஒன்றிணைத்து நியாயமான வகையில் நீதியை பங்கீடு செய்வதுமாகும். சமாதானம் குறித்த மேற்படி நோக்கிலான விளக்கங்களானவை குறித்த அத்துறைசார்ந்தவர்களின் சமாதானப் பணிகளுக்கு அடிப்படையாக அமைகின்றன. அத்துடன் இவ்வெல்லா நோக்குகளும் சமாதானத்தின் விதைகளைக் கொண்டிருக்கின்றன.

மேற்படி வரைவிலக்கணங்கள் தவிர அரசியல் கருத்தியல்களின் அடிப்படையிலும் சமாதானம் எனும் எண்ணக்கரு வேறுபட்ட நோக்குகளில் வரைவிலக்கணப்படுத்தப்பட வந்திருப்பதனை அவதானிக்கலாம். தாராண்மைவாதிகளும் சோசலிஸவாதிகளும் இலட்சிய வாதிகளும் சிலவேளை பாசிஸவாதிகளும் கூட தத்தமது அரசியல் கருத்தியலுக்கேற்ப சமாதானத்தை வரைவிலக்கணப்படுத்தியுள்ளனர்.

சோசலிஸவாதிகளின் பார்வையில் சமாதானம், சுதந்திரம், சமத்துவம் என்பன வார்க்கமற்ற சமூகத்திலேயே எதிர்பார்க்கக் கூடிய ஒன்றாகும். பாசிஸவாதிகளோ சமாதானம் என்பது 'கோளைகளின் கனவு' என்கின்றனர். இவர்களது பார்வையில் சமாதானம் வெறுக்கத்தக்க ஒன்றாகும். இவ்வாறே உலகில் மக்களால் பின்பற்றப்படுகின்ற பிரசித்திபெற்ற எல்லாச் சமயங்களும் சமாதானத்தைப் பற்றி எடுத்துக்கூறவும் அதனை வரையறை செய்யவும் முனைந்திருக்கின்றன. மதங்களின் சமாதானம் குறித்த போதனைகள் தெய்வீக நம்பிக்கை, ஒற்றுமை, நீதி, நியாயம், மானிடத்துவம் மற்றும் சகவாழ்வு போன்ற வரையறைகளுக்குள் உற்பட்டு அமைந்திப்பதனைக் காணலாம். உதாரணமாக இஸ்லாம் தன்னை ஒரு சாந்தி-சமாதானத்திற்கான மார்க்கமாக அடையாளப்படுத்துகிறது. ஆதலால் முஸ்லிம்கள் ஒருவரை ஒருவர் சந்திக்கும் போது முதலில் 'உங்களுக்கு சாத்தியும் சமாதானமும் உண்டாகட்டும்' எனக்கூறுகின்றனர். மேலும் சகோதரத்துவம், மன்னிப்பு அவ்வாறே பிறர் மீது அன்பு செலுத்துதல் மற்றும் உதவுதல் போன்ற சமாதானத்தை ஏற்படுத்துவதற்கான அடிப்படைகளையும் வலியுறுத்திக் கூறுகிறது. கிறிஸ்தவம் மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு, கருனை என்பவற்றை சமாதான சூழலுக்கு அத்திவாரமாக கருதுவதுடன் எதிரியொருவர் உங்களது ஒரு கன்னதில் அறைந்தல் மறுகன்னத்தையும் கொடுங்கள்-அவருக்கு வன்முறையால் உங்களது துலங்கத்தைக் காட்டாதீர்கள் எனச் சுட்டிக்காட்டுவதன் ஊடாக சமாதானத்தை முதன்மைப்படுத்துகிறது. அவ்வாறே பௌத்த மதம் நீதி, சமத்துவம், வன்முறையின்மை, தீண்டாமை, மற்றவர்களின் நலனில் கரிசனை காட்டல் மற்றும் ஜீவகாரூண்யம் போன்ற செயல்களை சமாதானச் செயற்பாடுகளாக சுட்டிக்காட்டுகிறது. இந்து மதம் பல்லினத் தன்மையை ஏற்றுக்கொள்வதுடன் செய்நன்றி மறவாமை, மன்னிப்பு, விட்டுக்கொடுப்பு அவ்வாறே ஜீவகாரூண்யம் என சமாதானத்தின் அடிப்படை அம்சங்கள் பலவற்றை போதிக்கிறது. ஓட்டுமொத்தத்தில் எல்லா மதங்களும் நன்மையை ஏவி தீமையைத் தடுப்பதுடன் மானிடர்கள், ஜீவராசிகள் மற்றும் இயற்கையின் படைப்புக்கள் மீது கருனை காட்டுதல், அன்பு செலுத்துதல், அவற்றுக்கு தீங்கிழைக்காமை என்பவற்றை வலியுறுத்துகின்றன. இவை சமாதானத்தின் அடிப்படையாக அமைகின்றன.
மேற்கூறியவரைவிலக்கணங்களினதும் விளக்கங்களினதும் அடிப்படையில் நோக்குகின்ற போது சமாதானமானது பண்முகப் பொருளில் விளக்கப்பட்டிருப்பதனைஅவதானிக்கலாம். சமாதானத்தின் இப்பல்பரிமான அர்த்தமானது பின்வரும் மூன்று அடிப்படையின் கீழ் வருவதாக ஏ.எஸ். பாலசூரிய (2001) சுட்டிக்காட்டுகின்றார். அவையாவன:

1. உட்சமாதானம்: உள்ளத்தினது அல்லது ஆத்மாவினது சமாதானத்தை இது குறித்து நிற்கிறது. இது வெளிவாரியான அல்லது சமூக சமாதானத்துக்கு அவசியமானது. தனிமனிதர்கள் அமைதியாகவும் சாந்தமாகவும் பழகுவதையும் நடந்து கொள்வதையும் இது குறிக்கிறது. மேலும் தனிமனிதர்களிடையே பேராசை, வெறுப்பு, கெட்ட எண்ணங்கள், கோபம் போன்ற தனிமனிதர்களை முரண்பாட்டுக்கும் வன்முறைக்கும் இட்டுச்செல்கின்ற பண்புகள் இல்லாது இருத்தலையும் இது சுட்டிக்காட்டுகிறது. அனேகமான மதங்களில் விசேடமாக கீழைத்தேய மதங்களில் உட்சமாதானம்

அதிகளவில் அழுத்திக் கூறப்பட்டிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. மதங்களின் நோக்கில் இவ்வகையான சமாதானம் என்பது வணக்கவழிபாடுகள், தியாணம் மற்றும் அறிவுஞானம் என்பவற்றினூடாக அடைந்துகொள்ள முடியும். 'யுத்தம் மனிதர்களின் உள்ளங்களிலிருந்தே உருவாகிறது' என்ற யுனெஸ்கோவின் கூற்றுக்கு அமைய சமாதானமும் மனிதர்களின் உள்ளத்திலேயே முதலில் நிலைநிறுத்தப்படல் வேண்டும். உள்ளார்ந்த சமாதானமே சமூக சமாதானத்துக்கும் உலக சமாதானத்துக்கும் அடிப்படையான உண்மையான சமாதானம் என கருதப்படுகிறது. ஒவ்வொருவரும் தங்களுக்குள் சமாதானத்தை கண்டுகொள்ள வேண்டும். அச்சமாதானம் உண்மையானதாகவும் அது வெளிச்சூழ்நிலைகளால் தாக்கத்துக்குட்படாததாகவும் இருக்க வேண்டும் என புகழ்பெற்ற சமாதானச் சிந்தனையாளரும் ஆர்வலருமான மகாத்மா காந்தி அவர்கள் குறிப்பிட்டிருப்பது நோக்கத்தக்கது (பார்க்க: Peter 2010).

2. சமூக சமாதானம்: சமூகத்தில் மக்கள் வேறுபாடுகள் மறந்து, வன்முறையிலோ அல்லது கலகத்திலோ ஈடுபடாது சந்தேசமாகவும் சகவாழ்வு வாழ்தலையும் இது குறிக்கிறது. சமூக ஒழுங்கு, சமூக நீதி மற்றும் சமூக இணக்கம் நிலைத்திருக்கும் போது சமூக சமாதானம் அடையப்பெற்றிருக்கும். உட்சமாதானமானது சமூக சமாதானத்தை அடைந்து கொள்வதற்கு அடிப்படையாக அமைவதுடன் சமூக சமாதானமானது தனிமனிதர்கள் உள்ளார்ந்த சமாதானத்தை அடைந்து கொள்வதற்கு அடிப்படையாக அமைகிறது. ஒரு சமூகம் உட்சமாதானம் நிலவுகின்ற அதிகமான தனிநபர்களைக் கொண்டிருக்கும் போது அச்சூழ்நிலை சமூக சமாதானம் கட்டியெழுப்படுவதற்கு வழிவிடுகிறது. முரண்பாடு, வன்முறை, கொலை மற்றும் கொள்ளை போன்ற அநீதிகள் ஒரு சமூகத்தில் காணப்படாதவிடத்து அச்சமூகம் அதனுள் சமாதானத்தைக் கொண்டிருக்கும்.

3. இயற்கையுடனான சமாதானம்: இயற்கையின் சமநிலையை மதித்து அதன் இயல்பு நிலையையும் சமநிலையையும் பேணும் வண்ணம் இயற்கையுடன் இணக்கமான இருத்தலை இது சுட்டிக்காட்டுகிறது. ஒவ்வொரு தனிமனிதர்களது உள்ளத்திலும் சமாதானம் நிலைத்திருக்கும் போது அவர்கள் சமூகத்துடனும் இயற்கையுடனும் சாதகமான ஊடாட்டத்தைப் புரிவர். இது இயற்கையுடனான சமாதானம் கட்டியெழுப்பப்பட வழி ஏற்படுத்தும்.

மேலே ஆராயப்பட்ட விளக்கங்களை அடிப்படையாகக் கொண்டு நாம் சமாதானத்தை பின்வருமாறு பரந்த நோக்கில் விபரிக்கலாம். 'சமூகங்களில் முரண்பாடுகள், வன்முறைகள், சச்சரவுகள், யுத்தங்கள், சிவில் ஒழுங்கீனங்கள், பொருளாதார சீர்கேடுகள், பாரபட்சங்கள், அரசியல் அத்துமீறல்கள் இல்லாமல் மக்கள் ஒன்றாகக் கூடி ஒற்றுமையுடன் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டும் தாம் வாழும் சூழலுடன் இணைந்தும் இசைந்தும் வாழும் நிலையே சமாதானமாகும்' எனலாம்.

## சமாதானம் நிலவும் சமூகம் ஒன்றின் பண்புகள் அல்லது சமாதானத்திற்கான முன்நிபந்தனைகள்

சமாதானம் குறித்த பரந்துபட்ட வரைவிலக்கணங்களையும் விளக்கங்களையும் நோக்கும் போது சமாதானம் நிலவும் சமூகம் ஒன்றில் யுத்தம் மற்றும் நேரடியான வன்முறைகள் இல்லாமை என்பதற்கு அப்பால் இன்னும் பல பண்புகள் காணப்பட வேண்டும் என்பதை அவ்விளக்கங்கள் எமக்கு எடுத்துரைக்கின்றன. அந்தவகையில் சமாதானம் நிலவும் சமூகங்களின் பண்புகளை பின்வருமாறு அடையாளப்படுத்தலாம்.

- யுத்தம் மற்றும் கலகங்கள் என எவ்வகையான வெளிப்படையான வன்முறையும் அற்றநிலை காணப்படும்.

- எந்தவகையிலுமான பாரபட்சம், பேதம் மற்றும் வேறுபாடு காட்டாத நிலை காணப்படும்.
- அடக்குமுறை, அதிகார மோகம், அநீதி இல்லாத நிலை காணப்படுவதுடன் சகலரும் பொதுவாழ்வில் பங்குபற்றும் நிலை காணப்படும்.
- பொருளாதார, சமூக மற்றும் கலாசார நிலைகளில் வறுமை இல்லாதிருக்கும்.
- எல்லா துறைகளிலும் மற்றும் எல்லா நிலைகளிலும் செழுமையும் நிலையான அபிவிருத்தியும் நிலவும்.
- பண்முக வேறுபாடுகளை சகித்துக்கொண்டு சகவாழ்வு வாழும் நிலையும் சமத்துவம், சகோதரத்துவம், நியாயம் மற்றும் சமூக நீதி பேணப்படும் நிலையும் காணப்படும்.
- மானிடர்களிடையே பரந்த சிந்தனை விருத்தியும் படைப்பாற்றலும் காணப்படும்.
- இயற்கையை நேசித்து இயற்கையின் சமநிலை சீர்குலையாது பாதுகாக்கும் மாண்பும் காணப்படும்.
- மனித மாண்புக்கு மதிப்பளித்து மனித உரிமைகளைப் பேணிப்பாதுகாக்கும் நிலை காணப்படும்.

பொருளாதாரம் மற்றும் சமாதானத்துக்கான நிறுவனம் (Institute for Economic and Peace 2013) எனும் ஒரு சர்வதேச ஆராய்ச்சி நிறுவனம் சமாதானம் நிலவும் சமூகங்களிலுள்ள 8 பிரதான அம்சங்களை அடையாளம் கண்டுள்ளது. சமாதானத்தின் தூண்களாகவும் அவை அடையாளம் காணப்படுகின்றன. அவையாவன: (1) மிகவும் செயற்திறனுடன் பணியாற்றும் அரசாங்கம், (2) சமத்துவமான முறையில் வளங்கள் பங்கீடு செய்யப்பட்டிருத்தல், (3) உயர்ந்த அளவிலான மானிட மூலதனம், (4) பலமான வியாபாரச் சூழல், (5) மற்றவர்களின் உரிமைகளை ஏற்றுக்கொள்ளல், (06) அயலவர்களுடனான நல்லுறவு, (7) எல்லோருக்கும் தவகல்கள் தாராளமாகக் கிடைக்கப்பெறல், மற்றும் (8) குறைந்த மட்டத்திலான ஊழல் என்பனவே அவையாகும். எனவே ஒரு சமாதானச் சூழல் என்பது வன்முறை, கலகம் மற்றும் யுத்தம் இல்லாத நிலை என்பவற்றுக்கு அப்பால் மேலும் பல அம்சங்கள் உறுதிசெய்யப்படும் சூழ்நிலையை குறித்து நிற்கிறது.

## சமாதானத்தின் முக்கியத்துவம்

சமாதானத்தை விளங்கிக்கொள்ளும் செயன்முறையில் சமாதானத்தின் முக்கியத்துவத்தை புரிந்துகொள்வதும் இன்றியமையாததாகிறது. சமாதானத்தின் முக்கியத்துவத்தை விளங்கிக்கொண்ட தனிநபர்கள் மற்றும் குழுக்களாலேயே தங்களிடத்திலும் தங்களைச் சூழவுள்ள பகுதியிலும் சமாதானச் சூழலை உருவாக்கிக் கொள்ள முடியும். சமாதானமானது பல்வேறு வழிகளில் முக்கியத்துவமுடையதாக உள்ளதனை அவதானிக்கலாம். சர்ஜுன் மற்றும் றிபான் (2011) ஆகியோர் சமாதானத்தின் முக்கியத்துவத்தை பின்வரும் வழிகளில் சுட்டிக்காட்டுகின்றனர்.

1. சீரான ஒழுங்கமைக்கப்பட்ட சமூகம் ஒன்றை உருவாக்குதல்: சமூகம் என்பது பல்வகைத் தன்மையில் காணப்படும் நிலையில் அதில் முரண்பாடும் வேறுபாடும் உருவாவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். சமூகத்தில் எவ்வளவு தூரம் நவீனத்துவம் ஏற்பட்ட போதிலும் முரண்பாடுகளும் வன்முறைகளும் பல்வேறு வடிவங்களில் வெடித்த வண்ணமே உள்ளன. இவ்வாறு காணப்படும் சமூகத்தைச் சீரான அமைதியான ஒழுங்கமைக்கப்பட்ட சமூகமாக மாற்றுவதற்குச் சமாதானம் அவசியமானதொன்றாகும்.

2. மனித உரிமைகள் பாதுகாக்கப்படல்: உலகின் எல்லாப் பகுதிகளிலும் மனித உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றது என்பதற்குப் பதிலாக இன்று அவை மீறப்படுகின்றன என்ற குரல்களே மேலெழுந்த வண்ணம் உள்ளன. இதனை மாற்றவும் உரிமைகளைப் பாதுகாக்கவும் சமாதானம் என்பது அவசியமானது. ஒரு நாட்டின் அபிவிருத்தியும் செழிப்பும் அந்நாட்டில் வாழும் குடிமக்களின் உரிமைகளின் பாதுகாப்பினை வைத்தே பிரதானமாக அளவிடப்படுகின்றன.
3. நிலையான அபிவிருத்தி: ஒரு நாடு நிலையான அபிவிருத்தியை

அடைவதற்கு சாதகமான சமூக மற்றும் பொருளாதார சூழல் அவசியமாகிறது. யுத்தங்கள், வன்முறைகள் மற்றும் கலகங்கள் நிலவுகின்றபொழுது அங்கு சொத்துக்கள், உயிரினச் சூழல் மற்றும் வளங்கள் என்பன சேதமடைகின்றன. இது தவிர யுத்தத்திற்காகப் பலகோடி பெறுமதியாக பணம் செலவிடப்படுகின்றது. மனித இனம் சீரழிகின்றது, வறுமை, பசி, பட்டினி, வேலையில்லாத் திண்டாட்டம் என்பன அதிகரிக்கின்றன. இவ்வாறான அபாயத்தைத் தடுப்பதற்குச் சமாதானம் அவசியமாகிறது. உண்மையில், ஒரு நாட்டின் சமாதானச் சூழலை வைத்தே அபிவிருத்தியும் முன்னேற்றமும் அளவீடு செய்யப்படுகின்றன.

4. நாட்டில் சட்டம் ஒழுங்கு பேணப்படுதல்: நாட்டில் சட்டம், ஒழுங்கு பேணப்படுகின்றது என்றால் அது அங்கு சமாதானம் நிலவுகின்றது என்பதை சுட்டிக்காட்டுகிறது. இவைகள் அங்கு கேள்விக்குறியாய் இருக்கும் போது யுத்தம், வன்முறை மற்றும் மோதல் போன்றவற்றின் விளைவுகளையே காணமுடியும். எனவே சட்டம், ஒழுங்கு பேணப்பட சமாதானம் அவசியமாகிறது.

5. வறுமை ஒழிப்பும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படலும்: இன்று உரிமைகளைப் பாதுகாத்தல் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைச் சாதிப்பதில் வறுமை மற்றும் அடிப்படை தேவைகள் பூர்த்தி செய்யப்படாமை போன்றன பெரும் சவாலாகவுள்ளன. வறுமையை வெற்றி கொள்ளல் என்பது உலகில் இன்று மிகப்பெரிய பிரச்சினையாக உள்ளது. அவ்வாறே, அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் உலகில் பல நாடுகள் சவால்களை எதிர்நோக்குகின்றன. எனவே இவ்விரண்டையும் வெற்றிகொள்ள சமாதானம் என்பது முக்கியமானது.

6. பூமிக்கூடையைப் பாதுகாத்தல்: மானிடம் வாழும் ஒரே இடம் இப்பூமிக்கூடையாகும். இதனை மாசுபடுத்திவிட்டு மானிடம் எங்கு செல்லப்போகின்றது என்ற வினா இன்று எல்லோரிடத்திலும் எழுந்துள்ளது. அணுவாயுத உற்பத்தி, மற்றும் அதன் பாவனைகள், ஏனைய ஆயுத பாவனைகள் மற்றும் மானிட செயற்பாடுகள் போன்றவற்றால் பூமியானது நாளுக்குநாள் அசுத்தமடைந்தும் வலுவிழந்தும் வருகின்றது. இதனால் சூழலின் இயற்கைத் தன்மையும் அதன் அவசியமும் இன்று புறந்தள்ளப்பட்டுள்ளது. எனவே இதனை பாதுகாக்கவும் சிறந்த இயற்கைக் சூழலை பெறவும் சமாதானம் அவசியம்.

மேலுள்ள விடயங்களுடன் சமாதானத்தின் முக்கியத்துவங்களாக பின்வருவனவற்றையும் அடையாளப்படுத்தலாம்.

- சீரான ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தை உருவாக்குவதற்கும் மனித உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் முக்கியத்துவமிக்கதாகிறது.
- பொருளாதாரத் தடைகளை வெற்றிகொண்டு சமூகத்தினதும் நாட்டினதும் நிலையான அபிவிருத்தியை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு முக்கியமானது.
- சமூகத்தில் காணப்படும் பண்மைத்துவ பண்புகள் கொண்ட குழுக்களிடையே தேசிய ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் கட்டியெழுப்புவதற்கு சமாதானம் அவசியமாகிறது.
- சட்டம், ஒழுங்கு பேணப்பட்டு, ஜனநாயக விழுமியங்கள் மதிக்கப்படுகின்ற வகையிலான நல்வாழ்வும் நல்லாட்சியும் நிலைபெறுவதற்கு சமாதானம் அவசியமாகிறது.

- வறுமை மற்றும் பட்டினி என்பன ஒழிக்கப்படுவதற்கும் அவ்வாறே அடிப்படை தேவைகள் பூர்த்திசெய்யப்படுவதற்கும் சமாதானம் இன்றியமையாதது.
- எவ்விதமான அரசியல் அடக்குமுறையோ தடையோ

  இன்றி எல்லாத் தரப்பிலான குடிமக்களும் அரசியலில் சுதந்திரமாக பங்குபற்றக்கூடியதும் அரசியல் ஸ்திரத்தன்மைமிக்குமான அரசியல் முறைமையை உருவாக்குவதற்கும் நிலைக்கச்செய்வதற்கும் சமாதானம் இன்றியமையாதது.
- குடிமக்களிடையே பரஸ்பரம் புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு, ஏற்றுக்கொள்ளல் மற்றும் ஒத்துழைத்தல் போன்ற பண்புகள் நிரப்பப்பெற்ற கலாசாரத்தை கட்டியெழுப்புவதற்கும் சமாதானம் முக்கியத்துவமிக்கதாகவுள்ளது.
- மானிடர்களின் இருப்புக்கும் சமூக கட்டமைப்பின் நிலைபேறுக்குமாக இயற்கைச் சூழலை கட்டியெழுப்பிக்கொள்வதற்கு சமாதானம் இன்றியமையாதது.

## நேர்நிலைச் சமாதானம்

சமாதானம் என்பது அதன் பண்புகளைப் பொறுத்து நேர்நிலைச் சமாதானம் மற்றும் எதிர்மறைச் சமாதானம் என சமாதான கற்கைத்துறை வல்லுனர்களால் பிரித்து வகைப்படுத்தப்படுவதுண்டு. குறிப்பான இந்தப் பாகுபாடு ஜொஹான் கல்துங்க் (பார்க்க: கல்துங்க் 1996) என்பவரால் ஆரம்பத்தில் அறிமுகப்படுத்தப்பட்டு இன்று பிரபல்யம் பெற்றிருக்கிறது. நேர்நிலைச் சமாதானம் என்பது சாதாரணமாக நாம் சமாதானத்தை வரையறை செய்தவற்றுடன் இன்னும் பல முன் நிபந்தனைகளை அல்லது பண்புகளை வேண்டி நிற்கின்றது. அவை எல்லாவற்றையும் முழுமையாக கொண்டிருக்கும் போதே அங்கு நிலவும் சமாதானத்தை நேர்நிலைச் சமாதானம் எனக்கூறலாம். அப்பண்புகளுக்கு எதிரான நிலை காணப்படுமாயின் அது எதிர்நிலை சமாதானம் (Negative peace) என்றழைக்கப்படும். உண்மையில் நேர்நிலைச் சமாதானம் என்பது சமாதான சமூகங்களை உருவாக்கி நிலைத்திருக்கச் செய்வதற்கு துணைநிற்கின்ற மனோநிலைகள், நிறுவனங்கள் மற்றும் கட்டமைப்புக்கள் என்பவற்றின் இருத்தலை குறித்து நிற்கிறது (Institute for Economic and Peace 2016). அந்த வகையில் ஒரு நேர்நிலைச் சமாதானத்தின் பண்புகளாகவும் முன்நிபந்தனைகளாகவும் பின்வருவை முக்கியத்துவப்படுத்தப்படுகின்றன.

### நேரடி யுத்தம் மற்றும் வன்முறை மட்டுமல்லாது முறைமுக வன்முறைகளும் அற்றநிலை

யுத்தம் மற்றும் வன்முறையற்ற நிலை என்பது சமாதானத்துக்கான சாதாரண விளக்கமாக இருந்த போதிலும் இதுவே சமாதான சூழல் ஒன்றின் அடிப்படைப் பண்பாகவும் உள்ளது. அந்தவகையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ யுத்தம், சண்டை, கலக்கங்கள், ஆட்கடத்தல், கப்பம் கோரல் மற்றும் குழப்பநிலை என எந்தவிதமான வன்முறைச் சம்பவங்களும் இல்லாத நிலையே நேர்நிலைச் சமாதானத்தின் பிரதான பண்பாகும். வெளிப்பார்வைக்கு அல்லது சர்வதேசத்திற்கு சமாதான சூழ்நிலையை உருவாக்குவாதாக கூறிக்கொண்டும் உடன்படடிக்கைகள் செய்துகொண்டும் நேரடி வன்முறையையும் யுத்தத்தையும் முடிவுக்கு கொண்டு வருவதுடன் மறைமுகமாக பல்வேறு வழிகளில் பொது மக்கள், குழுக்கள், அரச நிறுவனங்கள், அல்லது அடையாளம் காணமுடியாத வழிமுறைகளின் ஊடாக வன்முறைச் சம்பவங்கள் தூண்டப்படுவதோ அல்லது கட்டவிழ்த்து விடப்படுவதோ அது சாதகமான அல்லது நேர்நிலைச் சமாதான சூழலை குறித்து நிற்காது. அது எதிர்நிலைச் சமாதானம் என்றே அடையாளப்படுத்தப்படும். அந்த வகையில் நேர்நிலைச் சமாதானம் என்பது நேரடியாகக் காணப்படும் யுத்தம், வன்முறை மற்றும் கலகங்கள் என்பவை இல்லாமையுடன் மறைமுகமான கட்டமைப்பு வன்முறைகள் (உதாரணமாக வறுமை, திட்டமிட்ட நசுக்குதல்கள் மற்றும் இனந்தெரியாத வகையிலான தாக்குதல்கள்) என்பவை இல்லாது போவதையும் குறித்து நிற்கிறது.

## வேறுபாடு மற்றும் பாரபட்சம் காட்டுதல் இல்லாமை

நேர்நிலைச் சமாதானத்தின் மற்றொரு பண்பு அச்சமதானம் குறித்த சமுகத்தில் எந்தவித அடிப்பாடையிலுமான வேறுபாடுகளோ அல்லது பாரபட்சமோ காட்டப்படுதல் இல்லாமையை உறுதி செய்வதையும் உள்ளடக்கியுள்ளது. வன்முறை மற்றும் யுத்தம் என்பன இல்லாமல் மட்டுமன்றி சமுகத்திலுள்ள ஒருவர் அல்லது ஒரு பகுதியினர் இனம், மொழி, பால்நிலை, சாதி, நிறம் மற்றும் கலாசாரம் என்ற ரீதியில் வேறுபடுத்தப்பட்டு, அந்த அடிப்படையில் பாரபட்சமாக நடத்தப்பட்டு நசுக்கப்கப்படும் போது அங்கே உன்மையான சமாதானம் நிலவமுடியாது. எனவே நேர்நிலைச் சமாதானம் மக்களிடையே எவ்வித

வேறுபாடும் பேணப்படாத வகையில் சமூக ஒற்றுமையையும் இணக்கப்பாட்டையும் வலியுத்துகிறது.

## எல்லோரும் உள்வாங்கப்பட்ட முரண்பாட்டுத் தீர்வு

சமாதானதச் செயன்முறை என்பது அடிப்படையில் முரண்பாடுகளையும் பிணக்குகளையும் தீர்க்கமுற்படும் சூழலே. அந்தவகையில், பிணக்குகளையும் முரண்பாட்டுகளையும் தீர்க்க முற்படுகையில் அவற்றுக்கு அடிப்படையாக அமைகின்ற ஆழவேரூண்றிய காரணிகளைக் கண்டறிந்து முரண்பாட்டில் பங்குபொறுகின்ற அதேநேரம் முரண்பாட்டினால் பாதிக்கப்பட்டிருக்கின்ற எல்லாத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளும் வகையிலான தீர்வினை பெற்றுக்கொடுக்கும்போதே அது சாதகமான அதாவது நிலைத்து நிற்கக்கூடிய சமாதானத்துக்கு வழிவிடும். அவ்வாறே குறித்த முரண்பாடு மீண்டும் மேல் எழா வண்ணம் இருக்கும் வகையிலும் ஒரு நீடித்து நிலைக்கக் கூடிய தீர்வுத் திட்டத்தை அச்சமாதானச் செயன்முறை கொண்டிருக்க வேண்டும். குறிப்பாக சமாதான தீர்வுத்திட்டம் முரண்பாட்டினால் எல்லாத் தரப்பினருக்கும் எற்பட்ட இழப்புக்களை ஏற்றுக் கொள்ளுவதுடன் எல்லாத் தரப்பினருக்கும் திருப்திகரமான முடிவினை அல்லது விளைவினை வழங்கியிருக்க வேண்டும். மேலும் எதிர்காலத்தில் எழக்கூடிய சவால்களைச் சமாளிக்கக் கூடியதாக நெகிழ்ந்து வளைந்து கொடுக்கக் கூடியவகையில் போதுமான ஏற்பாடுகளையும் அத்தீர்வுத் திட்டம் கொண்டிருக்க வேண்டும். எனவே நேர்நிலைச் சமாதானம் என்பது எல்லோரும் ஏற்றுக் கொள்ளக் கூடிய முரண்பாட்டுத் தீர்வு முறையின் அவசியத்தை வலியுறுத்திக் கூறுகிறது.

## சாதகமான அபிவிருத்தியும் எழுச்சியும்

சமாதான சூழல் ஒன்று கட்டியெழுப்பப்படும் போது அல்லது முரண்பாடு ஒன்றுக்கு சமாதான தீர்வு ஒன்று அடையப்பெறும் போது அது நேர்நிலையானதாக அமைவதை உறுதிப்படுத்துகின்ற மற்றொரு விடயம் அச்சமாதானம் சாதகமானதும் நிலையானதுமான அபிவிருத்திக்கு வழிவிடுவதாக அமைவதாகும். அதாவது முரண்பாட்டால் பாதிக்கப்பட்ட சமூகத்தில் அல்லது பகுதியல் சாதாகமான பலதுறைசார் அபிவிருத்தியையும் எழுச்சியையும் தூண்டுவதாக சமாதான சூழலும் செயன்முறையும் காணப்படல் வேண்டும். முக்கியமாக தனிநபர்களிடையேயும் சமூகத்திலும் தேசத்திலும் வறுமை, ஏழ்மை மற்றும் பற்றாக்குறை என்பன நீங்குவதற்கும் அவ்வாறே சமுக, பொருளாதார, கலாசார, மற்றும் நாகரிக ரிதியான அபிவிருத்தியும் புத்தெழிச்சியும் அச்சமூகத்தில் ஏற்படுவதற்கும் அடையப்பெற்ற சமாதானம் வழிவிட வேண்டும். ஆப்போதே அச்சமாதானம் அச்சமூகத்தில் தொடர்ச்சியாக நிலைத்திருக்கும்.

## சுமத்துவமும் சமவாய்ப்பும்

ஒரு நேர்நிலைச் சமாதானம் என்பது சமூகத்திலுள்ள அல்லது நாட்டிலுள்ள மக்கள் எல்லோரும் சமமாக நடாத்தப்படுவதையும் சமசந்தர்ப்பம் வழங்கப்படுவதையும் அழுத்திக் கூறுகிறது. அதாவது மக்கள் எந்தவித பேதமும் காட்டப்படாமல் சமமானவர்களாக மதிக்கப்படுவதை, விசேடமாக ஆண்-பெண் சமத்துவத்தையும் இது குறிக்கின்றது. அவ்வாறே சமூகத்தில் எந்த அடுக்கமைவில் உள்ளவர்களாக இருந்தாலும் அவர்களும் சமமாக நடத்தப்படுவதையும் பொருளாதாரம் ஈட்டல், கலாசார, மத மற்றும் சமூக-பாரம்பரிய விழுமியங்களை பேணி வளர்த்தல், தங்களது ஆற்றல்களை

வெளிப்படுத்தல், சமூகத்தில் தமது (தனித்துவ) இடத்தை வெளிக்காட்டுதல் போன்ற விடயங்களில் மக்கள் எந்தவித வேறுபாடும் காட்டப்படாது சமசந்தர்ப்பம் வழங்கப்படுவதையும் நேர்நிலைச் சமாதானம் குறித்து நிற்கின்றது.

## சமூக நீதியும் சட்டத்தின் ஆட்சியும்

நேர்நிலைச் சமாதானம் நிலவும் சமூகத்தில் சமூக நீதியும் சட்டத்தில் ஆட்சியும் நிலைத்திருத்தல் வேண்டும். சாதகமானதும் நிலையானதுமான சமாதானம் என்பது சமூக நீதியின் அடிப்படையிலேயே வரையறை செய்யப்படுகிறது. நீதி என்பது சட்டம், மதம், மற்றும் நியாயம் ஆகிய விடயங்களில் ஒழுக்க ரீதியில் சரியாக இருப்பதைக் குறிக்கிறது (Konow 2003). ஒரு சமூகத்தில் மக்களும் அவர்களின் விவகாரங்களும் முறையாக ஒழுங்குபடுத்தப்பட்டிருப்பதையும் இது சுட்டிக்காட்டுகிறது. ஆதலால் சமூகங்களிலும் முழு உலகிலும் சமாதானத்தை நிலைநாட்ட சமூக நீதி பேணப்படுதல் என்பது ஒரு அடிப்படை அம்சமாக வேண்டப்படுகிறது. இங்கு சமூக நீதி என்பது சட்டத்தின் முன்பும் நீதியின் முன்பும் யாராக இருந்தாலும் சமமாக நோக்கப்படுவது அல்லது நடாத்தப்படுவது என்பதைக் குறிக்கிறது. அதாவது சமூகத்தில் யார் குற்றம் செய்தாலும் அல்லது அநீதி இழைத்தாலும் அவர் அவரது அந்தஸ்த்தை அல்லது பலத்தை கொண்டு சட்டத்தினதும் நீதியினதும் பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது என்பதையும் சமூகத்தில் மிகவும் தாழ்ந்த மட்டத்திலுள்ள சாதாரண பொதுமக்களுக்கு அநீதி இழைக்கப்பட்டாலும் கூட அதற்கு தகுந்த நீதியும் நியாயமும் வழங்குவதையும் இது குறித்து நிற்கிறது. ஆந்தவகையில் சமூகத்தில் தொழில் அந்தஸ்த்து கல்வி, பணம், இனம், மதம் மற்றும் பால்நிலை பேதம் போன்றன காட்டப்பட்டு குறிப்பிட்ட ஒரு பகுதியினருக்கு அல்லது தனிநபருக்கு நீதி மறுக்கப்படுமாயிருந்தால் அல்லது அநீதி இழைக்கப்படுமாக இருந்தால் அங்கு உண்மையான சமாதானம் நிலவ முடியாது. அநீதி இழைக்கப்பட்டு பாதிக்கப்பட்டவன் எப்போதும் மற்றவர்களை எதிரியாகவே நோக்குவதுடன் சந்தர்ப்பம் வரும் போது அவர்களைத் தாக்க வேண்டும் என்ற மனோநிலையையும் தொடர்ந்தும் கொண்டிருப்பான்.

## முனித உரிமைகளுக்கு மதிப்பளித்தலும் பாதுகாத்தலும்

ஒரு நேர்நிலைச் சமாதானம் நிலவும் போது அங்கே மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து பேணிப் பாதுகாக்கும் நிலை காணப்படல் வேண்டும். சமாதானமும் மனித உரிமையும் ஒன்றுக்கொன்று அவசியமானவை. முனித உரிமைகள் உணரப்பட்டு பாதுகாக்கப்படாத வரையில் சமாதானத்தை அடைய முடியாது. ஆவ்வாறே, சமாதானம் இல்லாத நிலையில் மனித உரிமைகளை அனுபவிக்க முடியாது. ஊண்மையில் சமாதானத்துக்கான உரிமை என்பதே மனிதர்களின் அடிப்படை உரிமைகளில் ஒன்றாக உள்ளது. ஏல்லோருக்கும் வேறுபாடின்றி சமமான அடிப்படை உரிமைகள் அனுபவிக்கும் நிலை தோன்றும்போதே அங்கு ஒவ்வொரு தனியாட்களும் தாம் விரும்பியவற்றை சுதந்திரமாக மேற்கொள்ள முடிவதுடன் ஒவ்வொருவருக்கும் சுதந்திரமான வாய்ப்பும் காணப்படும். சுதந்திரத்தை முழுமையாக அனுபவிக்கும் மக்களே சமாதானமான சூழலை உருவாக்கவும் அவ்வாறே பாதுகாக்கவும் கூடிய மனோநிலையை உருவாக்கிக்கொள்வதோடு அவர்களது நடத்தைகளும் சமாதானத்தை நோக்கியதாக இருக்கும். துவிர அவர்கள் முரண்பாடு மற்றும் வன்முறை நோக்கி அதிகளவில் சிந்திக்கவோ செயற்படவோ மாட்டார்கள். முனித உரிமைகள் முழுமையாக வழங்கப்பட்ட அல்லது அனுபவிக்க வாய்ப்பு அளிக்கப்பட்ட சமூகத்திலேயே மனிதத்துவத்திற்கு மதிப்பளிக்கும் மனிதநேயமும் சமாதான கலாசாரமும் வளர்ந்திருக்கும்.

## இயற்கையுடன் இணக்கமாக இருத்தல்

நேர்நிலைச் சமாதானம் என்பது மனிதர்களிடையே அல்லது சமுகங்களில் சமாதான சூழ்நிலை நிலவுவதை மட்டும் சுட்டிக்காட்டவில்லை. மாறாக மனிதர்கள் அவர்கள் வாழும் சமூகத்திலுள்ள அல்லது சூழலிலுள்ள படைப்புக்களான விலங்குகள், தாவரங்கள் மற்றும் ஏனைய படைப்புக்களுடம் சேர்ந்து இனைந்து வாழ்வதையும் நேர்நிலைச் சமாதானம் குறிக்கின்றது. உண்மையில் சமாதானம், மானிட நலன் மற்றும் சூழல் பாதுகாப்பு என்பவற்றுக்கிடையே நெருங்கிய தொடர்பு காணப்படுகிறது. சூழல் சமநிலையை குழப்பும் போது அதாவது சூழல் சமநிலை

மாற்றமடையும் போது அது சமூக கட்டமைப்பில் மற்றத்தை ஏற்பத்தி சமூக ஸ்திரமின்மையே உருவாக்கி விடும். அவ்வாறே சூழல் மாற்றம் சமூகத்தில் நேரடி வன்முறைகளின் அளவையும் அதிகரிக்கச் செய்யும். ஆதலால் உண்மையான அல்லது நேர்நிலையான சமாதானம் என்பது சூழலுடன் இணக்கமாக இருத்தலையும் அழுத்திக் கூறுகிறது. மிருகங்கள் மிது ஜீவகாருனியம் காட்டுவது, சூழலை சுத்தமாக வைத்திருப்பது, இயற்கை சூழலில் பச்சயத்தை அதிகரிக்கச் செய்வது, இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதல் என்பன போன்ற அம்சங்கள் சூழல் சமாதானம் எனும் விடயத்தில் அடங்குகின்றன. இயற்கையுடன் சமாதானமாக அல்லது இணக்கமாக இராதவிடத்து பூமியின் வெப்பநிலை அதிகரித்து இயற்கை பேரழிவுகளும் அழிவு தரும் நோய்களும் அதிகாிக்க வாய்ப்பு ஏற்படும். இச்சூழ்நிலை படிப்படியாக மானிட இருப்பையே கேள்விக்குறியாக்கும்.

## முடிவுரை

சமாதானம் எனும் எண்ணக்கரு இன்று பரந்தளவில் பேசப்படும் ஒன்றாக மாறியிருந்தாலும் வரலாற்றில் நீண்டகாலமாகவே பிரபல்யமான ஒரு எண்ணக்கருவாகும். சாதாரண மொழியில் சமாதானம் என்பதை யுத்தம் மற்றும் வன்முறை இல்லாத சமூக நிலை என வரையறை செய்தாலும் வெவ்வேறு மக்களுக்கும் வெவ்வேறு சூழ்நிலைகளில் வேறுபட்ட பொருளைக் கொடுக்கும் ஓர் எண்ணக்கருவாக அது அமைந்திருக்கிறது. சிலர் சமத்துவமாக மதிக்கப்படுதலையும் சகவாழ்வு வாழ்தலையும் சமாதானமாக காண்கின்றனர். சிலர் பொருளாதார நீதியாக நீதியான பங்கீடும் வழங்கலும், நிலையான அபிவிருத்தியுமே சமாதானம் எனக்கருதுகின்றனர். சிலர் நல்லாட்சி நிலைத்தலை சமாதானமாக காண்கின்றனர். உண்மையில் நேரடியான யுத்தம் மற்றும் வன்முறையற்ற சூழ்நிலை என்பவற்றுடன் மேற்படி அம்சங்களும் சாதகமாக சமாதானத்தின் பன்புகளாக உள்ளன. இவற்றுடன் மனித மாண்பியம், இயற்கையுடன் இணக்கமாக இருத்தல் மற்றும் அதன் சமநிலையைப் பேணுதல், சமத்துவம், சம உரிமை, சம சந்தர்ப்பம், சம நீதி போன்ற அம்சங்களும் சமாதானத்தை பிரதிபலித்து நிற்கின்றன. அந்தவகையில் யுத்தமும் வன்முறையும் இல்லாத நிலை, சமூக நீதியின் இருப்பு, நிலையான சமூக ஒழுங்கு, அடக்குமுறை மற்றும் பாரபட்சம் அற்ற நிலை, மானிட மாண்புக்கும் உரிமைகளுக்கும் மதிப்பளிக்கும் சமூக நிலை, முரண்பாடுகளை அமைதி வழியில் தீர்த்தல் என சமாதானம் எனும் எண்ணக்கரு பல வழிகளில் புரிந்துகொள்ளப்பட்டிருக்கிறது.

எனவே சமாதானம் குறித்த வேறுபட்ட அர்த்தங்களையும் அதன் சாதக-எதிர்மறை நோக்கிலான விளக்கங்களையும் புரிந்து கொள்ளல் என்பது சகல நிலைகளிலும் சமாதான சூழலையும் கட்டமைப்புக்களையும் கட்டியெழுப்புவதற்கு உதவியாக இருப்பதுடன் சமாதான கலாசாரத்தை மக்கள் மத்தியில் வளர்த்து நிலைக்கச் செய்வதற்கும் உதவியாகவிருக்கும். சமாதானத்தை முறையாக புரிந்துகொன்டிருக்கின்ற சமூகத்திலேயே நிலையான சமாதானத்தை உணர முடியும். இன்று மானிடம் எதிர்நோக்கின்ற அனேகமான பிரச்சினைகளையும் சவால்களையும் தீர்ப்பதற்கு சமாதானம் அடிப்படையான முன்நிபந்தனையாக அடையாளம் காணப்பட்டிருக்கிறது. அதற்கு சமாதானம் குறித்த முறையாக எண்ணக்கருவாக்கமும் புரிந்து கொள்ளலும் இன்றியமையாததாகிறது.

## உசாத்துணைகள்

Abrams, I. (ed.) 1995. *The words of peace: selections from the speeches of the winners of the Noble Peace Prize*. New York: Newmarket Press.

Balasooriya, A.S. 2001. *Learning the way of peace: a teacher's gude to peace education*. New Delhi: UNESCO.

Galtung, J. 1969. Violence, peace, and peace research. *Journal of Peace Research* 6(3): 167-191.

Gultung, J. 1996. *Peace by peaceful means: peace and conflict, development and civilization.* New Delhi: Sage Publication.

Institute for Economic and Peace (IEP). 2013. *Pillers of peace: understanding the key attitudes and institutions that underpin peaceful society*. New York: IEP.

Institute for Economic and Peace (IEP). 2016. *Positive peace report 2016: a compilation of the leading reseach on positive peace and resilience.* New York: IEP.

Kin, C.S. 2008. *The words of Martin Luther King, Jr*. New York: Newmarket Press.

Klein, J.P., Goertz, G & Diehl, P.F. 2008. The peace scale: conceptualizing and operationalizing non-rivalry and peace. *Conflict Management and Peace Science* 25:67-80.

Konow, J. 2003. Which is the fairest one of all? a positive analysis of justice theories. *Journal of Economic Literature* 41(4):1188-1239.

Peter, A.S. 2010. *The greatest quotations of all-time*. USA: Xlibris Corperation

Vesilind, P.A. 2005. *Peace engineering: when personal values and engineering careers converge*. USA: Lakeshore Press.

சர்ஜூன், ஆ மற்றும் றிபான், ஏ.எம். 2011. *சமகால அரசறிவியல் எண்ணக்கருக்கள்.* கொழும்பு: இஸ்லாமிக் பு(B)க் ஹவுஸ்.